Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 96 of 2024

DATE : 16.05.2025

Depositions of witness for Prosecution

PW: 6

| | | | |
|---|---|---|---|
| Name | ஜஹாங்கீர் | Caste | |
| Father/Husband's Name | பீர்முகமது | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of May 2025

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் கூமாப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் ஜவுளி கடை வைத்துள்ளேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அனுமதியின்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை : –**

1) கடந்த 05.02.2016 ம் தேதி இரவு சுமார் 08.15 மணியளவில் நான் எனது கடையில் இருந்த போது போலீசார்கள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் அப்போது என் கடை அருகேயுள்ள ஜம்ஜம் ேஹாட்டல் கடை முன்பு வழக்கின் எதிரி தன்னுடைய இருசக்கர வாகனத்தினை போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்திக்கொண்டு இருசக்கர வாகனத்தில் அமர்ந்து கொண்டு போன் பேசிக்கொண்டிருந்ததாகவும் அப்போது சார்பு ஆய்வாளர் பாரதிராஜா இருசக்கர வாகனத்தை ஓரமாக நிறுத்த சொல்லி கேட்டதற்கு பொது இடத்தில் வைத்து சார்பு ஆய்வாளரை தகாத வார்த்தையால் பேசி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அதை சாட்சிகள் சத்தம்போட்டு போக சொன்னதாகவும் அப்போது போகும் போது வழக்கின் எதிரி சார்பு ஆய்வாளரை மிரட்டிவிட்டு சென்றதாகவும் அரசு பணியில்இருந்த சார்பு ஆய்வாளரை அரசு பணியை செய்யவிடாமல் தடுத்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் தெரிய வந்ததாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு

தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : – இல்லை.**

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு